00007

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

**SNP 8530/ESP2230 – விசேட தேவைகள்சார் கல்விக்கான உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 20.08.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி - 1 இல் அமைந்துள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - 2 இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

பகுதி I

1. விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய குறிப்பான வகிபாகங்கள் மூன்றினை (03) விளக்குக.
2. விசேட தேவையுடைய பிள்ளைகளின் விருத்தியில் வீட்டுச் சுற்றாடல் எத்தகைய தாக்கத்தினைச் செலுத்தும் என்பதனை மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் பரிசீலிக்குக.
3. உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியருக்கு "ஆயத்தநிலை" பற்றிய எண்ணக்கரு தொடர்பான அறிவு எவ்வாறு பயனுள்ளதாக அமையும் என இரண்டு (2) உதாரணங்களுடன் விளக்குக.
4. பியாஜேயின் அறிகை விருத்திக் கோட்பாடு எவ்வாறு விசேட கல்வி ஆசிரியருக்குப் பயனுள்ளதாக அமையும் என மூன்று (3) உதாரணங்களின் துணையுடன் கலந்துரையாடுக.
5. விக்கொட்ஸ்கியின் அறிகை விருத்தி தொடர்பான கோட்பாட்டினை விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு உதவுவதற்கு எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதனை மூன்று (3) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.
6. உங்களுடைய வகுப்பறையில் விசேட தேவையுடைய பிள்ளைகள் வெளிக்காட்டும் பொதுவான மனவெழுச்சி வெளிப்பாடுகள் இரண்டினை (2) விபரிக்குக.
7. ஒரு ஆசிரியர் விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளிடத்தில் 'கற்றல் இடமாற்றம்' நிகழ்வதற்கு எவ்வாறு உதவலாம் என இரண்டு (2) உதாரணங்களுடன் விளக்குக.
8. உங்களது வகுப்பறையில் விசேட தேவைகொண்ட பிள்ளைகளின் ஞாபகத்திறனை முன்னேற்றுவதற்கு நீங்கள் பின்பற்றும் மூன்று (3) அணுகுமுறைகளைப் பட்டியற்படுத்துக.

(5x8= 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

I. பரிசோதனைசார் மற்றும் பரிசோதனைசாரா பிள்ளை ஆய்வு முறைகளுக்கிடையிலான மூன்று (3) வேறுபாடுகளை விளக்குக.

(6 புள்ளிகள்)

II. உங்களுடைய வகுப்பறையில் இருந்து விசேட தேவைக்கொண்ட பிள்ளை ஒன்றினை தெரிவுசெய்து, அப்பிள்ளையின் நடத்தையை அவதானிப்பதற்கான அவதானிப்புப் படிவம் ஒன்றினைத் தயாரிக்குக.

(7 புள்ளிகள்)

III. நீங்கள் தெரிவுசெய்த பிள்ளை விசேட நடத்தைசார் பிரச்சினைகளைக் கொண்டிருப்பின் அப்பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு நீங்கள் உதவக்கூடிய மூன்று (3) உபாயங்களை விளக்குக.

(7 புள்ளிகள்)

10.

I. சமூகத்தில் 'விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள்' வெளிக்காட்டும் எதிர்மறையான மனப்பாங்குகள் மூன்றினைப் (3) பரிசீலிக்குக.

(6புள்ளிகள்)

II. 'விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள்' தொடர்பில் ஆசிரியர்களிடத்தில் உடன்பாடான மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கான மூன்று (3) உபாயங்களை விபரிக்குக.

(7 புள்ளிகள்)

III. 'விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள்' பற்றி பெற்றோர்களிடத்தில் நேர் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கான மூன்று (3) உபாயங்களை விபரிக்குக.

(7 புள்ளிகள்)

11.

I. புரொய்டின் உளப்பகுப்பாய்வுக் கொள்கைளின் இரண்டு (2) விதிகளைப் பரிசீலிக்குக.

(6 புள்ளிகள்)

II. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் ஆளுமையை மேம்படுத்துவதற்காக மேற்கூறிய விதிகளை எவ்வாறு பிரயோகிப்பீர்கள் என விளக்குக.

(7 புள்ளிகள்)

III. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய இணை - கலைத் திட்டச் செயற்பாடு ஒன்றினைத் திட்டமிடுக.

(7 புள்ளிகள்)

12.

I. "தகவல் செயன்முறைப்படுத்தும் மாதிரியின்" அடிப்படையை விளக்குக.

(6 புள்ளிகள்)

II. உங்களது வகுப்பில் உள்ள விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் கவனத்தை எவ்வாறு ஈர்த்தெடுப்பீர்கள் என மூன்று (3) உதாரணங்களின் துணையுடன் விபரிக்குக

(7 புள்ளிகள்)

III. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கற்றலுக்காக புலக்காட்சியை மேம்படுத்துவதற்குப் பிரயோகிக்கக்கூடிய மூன்று (3) உபாயங்களை விளக்குக.

(7 புள்ளிகள்)

13.

I. உள்ளடங்கல் வகுப்பறையொன்றின் ஆசிரியர் ஒருவருக்கு "கற்றல் கோட்பாடுகள்" தொடர்பான அறிவு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது என சுருக்கமாக விளக்குக.

(6 புள்ளிகள்)

II. ஏதாவது ஒரு தெரிவுசெய்யப்பட்ட கற்றல் கோட்பாடொன்றினை எவ்வாறு உங்களுடைய வகுப்பறையிலுள்ள விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளிடத்தில் பிரயோகிப்பீர்கள் என விபரிக்குக.

(7 புள்ளிகள்)

III. நீங்கள் தெரிவுசெய்த கற்றல் கோட்பாட்டினை விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கற்றலுக்காக பிரயோகிக்கும் போது எதிர்கொள்ளும் மூன்று (3) சவால்களையும் அவற்றை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் மூன்றையும் (3) விளக்குக.
(7 புள்ளிகள்)

14.

I. உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர் ஒருவருக்கு 'ஊக்கல்' பற்றிய அறிவு எவ்வாறு முக்கியத்துவம் உடையதாக அமையும் என கலந்துரையாடுக.
(6 புள்ளிகள்)

II. விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளை கற்றலுக்காக ஊக்குவிப்பதற்கு மானிடத்துவ அணுகுமுறை சார்ந்த கோட்பாடுகளை எவ்வாறு பிரயோகிப்பீர்கள் என மூன்று (3) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.
(7 புள்ளிகள்)

III. உள்ளடங்கல் வகுப்பறையொன்றின் மாணவர்களிடத்தில் அகவூக்கலை முன்னேற்றுவதற்கு பயன்படுத்தக்கூடிய ஊக்குவித்தல் உபாயங்கள் மூன்றினை (3) விபரிக்குக.
(7 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*